# அகரம் பவுண்டேசன் (Agaram Foundation)

நடிகர் சிவக்குமார் அவர்கள் 30 ஆண்டுகளுக்கு மேலாக பொதுத்தேர்வுகளில் சிறப்பிடம் பெறுபவர்களுக்கு குறிப்பாக சமூகத்தில் நலிந்த பிரிவினருக்குப் ஸ்ரீசிவக்குமார் கல்வி அறக்கட்டளை மூலம் பரிசுகள் வழங்கி ஊக்கப்படுத்தி வருகிறார்கள். இதனைத் தொடர்ந்து அவருடைய அன்பு மகன்களான நடிகர் சூர்யாவும் பின்பு நடிகர் கார்த்திக்கும் இணைந்து அகரம் பவுண்டேசன் வாயிலாக கல்வியில் ஆர்வம் உள்ள நலிந்த மாணவர்களுக்கு உதவி வருகிறார்கள்.

இதற்காக வழிகாட்டி மற்றும் விதைகள் ஆகிய இரு திட்டங்கள் வாயிலாக் தெளிவான வரையறைகளை உருவாக்கிக் கொண்டு, கல்வியில் ஏழை, எளிய மாணவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணமுடைய தன்னார்வத் தொண்டர்களின் ஒத்துழைப்போடு சிறப்பாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விதை திட்டமானது +2 பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற ஏழை, எளிய மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இத்திட்டத்தின் வாயிலாக தங்களுடைய ஏழ்மையின் காரணமாகத் தொடர்ந்து படிக்க முடியாத, சமூகத்தில் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட மாணவர்கள் தங்கள் கல்வியை தொடர்வதற்கு உதவி வருகிறார்கள். இதனால் ஓராண்டில் 200-லிருந்து 300 மாணவ, மாணவியர் பயனடைகிறார்கள். இத்திட்டத்தில் பயனாளிகளைத் தேர்வு செய்தவற்கு +2 பொதுத்தேர்வில் அவர்களின் மதிப்பெண், கிராமப்புறம், ஏழ்மை நிலை, ஆதரவற்ற நிலை, பெற்றோர்களின் சமூக மற்றும் பொருளாதாரக்காரணிகள் போன்ற பலவற்றுடன் மாணவர்களின் ஆர்வமும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட ஆய்வுகளுக்காக மாணவர்களின் வீட்டிற்கே சென்று விசாரித்து உண்மையை அறிகிறார்கள். இது இவர்களது தனிச்சிறப்பாகும். இத்தேர்வு முறை, எனது 45 ஆண்டுக்கால கல்விப்பணி அனுபவத்தில் தெரிய வந்த மிகச்சிறந்ததொரு தேர்வு முறையாகும். மேலும் கடந்த கால நிகழ்கால அனுபவங்களையும் கணக்கில் கொண்டு தொடர்ந்து தேவையான புதிய காரணிகளைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு தேர்வுமுறையை தொடர்ந்து அறிவியல் பூர்வமாக செழுமைப்படுத்தி வருகிறார்கள்.

கல்வி உதவிக்குத் தேர்வு செய்யப்படும் மாணவர்கள் தங்களது பட்டப்படிப்பை முடித்து ஒரு பணியில் அமரும்வரை தேவையான பல பயிலரங்குகள் வாயிலாக தொடர்ந்து வழிகாட்டி வருகிறார்கள். இதன் மூலம் போட்டிகள் நிறைந்த இவ்வுலகில் கிராமப்புற மாணவர்கள் தங்களுக்கான இடத்தைப் பெறுவதற்கு உதவிவருகிறார்கள். அவர்களுடைய கல்வி மட்டுமின்றி அவர்களிடம் சமூகப் பொறுப்புணர்வும் வளர்க்கப்படுகிறது. அவர்கள் சிறந்த குடிமக்களாக உருவாகி சமூகத்திற்கும் நாட்டிற்கும் சேவை செய்ய வழிகாட்டுகிறார்கள். இப்பணியில் அக்கறையுள்ள எஸ்.ஆர்.எம்., ஜேப்பியார் போன்ற பிற கல்வி நிறுவனங்களதும், ஏழைகளுக்கு உதவும் எண்ணம் கொண்ட தொழில் நிறுவனங்களதும், மற்றும் வங்கிகளுடைய ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்கிறார்கள்.

அகரம் பவுண்டேசன் அறக்கட்டளையின் பணி சிறப்பாக அமைவதற்கு, எழுத்தாளர் த.செ, ஞானவேல் மற்றும் ஜெயஸ்ரீ ஆகியோரின் வழிகாட்டுதலில் 300க்கும் மேற்பட்ட தன்னலமற்ற தன்னார்வத் தொண்டர்களின் சமூக அக்கறையுடன் கூடிய உழைப்பு ஒரு முக்கிய பங்களிப்பாகும். எல்லாவற்றுக்கும் மேலாக இதற்கான செலவுகளை எதிர்கொள்வதில் நடிகர் சிவக்குமார், நடிகர் சூர்யா, நடிகர், கார்த்திக் ஆகியோரின் தாராள மனசை நாம் பாராட்டமல் இருக்க முடியாது. இதன் பயனாக இன்று கிட்டத்தல்ல 1000 மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள் என்பது தமிழகத்தின் ஒரு நிகழ்கால வரலாறு ஆகும். இவை அனைத்தையும் ஏவ்வித விளம்பரமுன்றிச் செய்துவருவதன்வாயிலாக இன்று அகரம் பவுண்டேசன் தமிழக மக்களிடம் ஒரு மிகப் பெரிய அங்கீகாரம் பெற்றுள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக, திண்டிவனம் நகர மற்றும் ஊரகக் கல்வி மேம்பாட்டுக் கழகம் திண்டிவனம் பகுதியில் செய்துவரும் கல்விப் பணிகளுக்கு, குறிப்பாக தாய்த் தமிழ் தொடக்கப்பள்ளிக்கு இதுவரை 15 இலட்சத்திற்குமேல் தொடர்ந்து நன்கொடை அளித்து, எங்கள் பணி தமிழக அளவில் அறிமுகமாவதற்கு அகரம் பவுண்டேசன் உற்றத்துணையாக இருந்துவருகிறது.

நாள் : 21.10.2014

பிரபா.கல்விமணி